காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 65 இன் பிரகாரம், ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதியையும் மற்றும் அதன் பயனுள்ள ஆயுட்காலத்தையும் குறைந்தபட்சம்	சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி என்பனவற்றை வருடாந்தம் மீள்மதிப்பீடு செய்வதற்கோ அல்லது மீளாய்வு செய்வதற்கோ, அவை தொடர்பான தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றின்	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான நியமங்களைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படவில்லை.	மூலம் நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதாக் தெரிவிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	மீளாய்வாண்டில் ரூபா 524,576 பெறுமதியான நிலையான சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்தன. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பந்தி 86(உ)(ii) இன்படி அந்தச் சொத்துக்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தாமையும் மற்றும் கணக்கீட்டு நியமம் 7 இன் பந்தி 87(ஈ) இன்படி அகற்றப்பட்டமை மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 22,400 பணம் உரிய அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அதற்கான சீரமைப்புக்களை மேற்கொள்வதையோ அல்லது அவசியமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படவில்லை. இதன் காரணமாக, உரிய சொத்துக் கணக்குகளின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்குகளின் மீதிகள் சரியற்றதாக இருந்தன. மேலும், அகற்றப்பட்டமை மூலம் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் கணக்கிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் சீரமைக்கப்படவில்லை.	எதிர்காலக் கணக்கீட்டு ஆண்டுகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறையை நிவர்த்தி செய்வதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான நியமங்களைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	அலுவலகத்திற்குச் சொந்தமான மட்டக்களப்பு கிளையின் 2023 ஆம் ஆண்டிற்கான வாடகையாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 900,000 இற்குப் பதிலாக, மீளாய்வாண்டில் ரூபா 1,200,000 செலுத்தப்பட்டமையினால், அந்த வருடத்தின் வாடகை ரூபா 300,000 ஆல் நிதிக்கூற்றுக்களில் அதிகமாகப் பதியப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அந்த வருடத்தின் மிகை அதே பெறுமதியால் குறைவாகப் பதியப்பட்டிருந்தது.	அட்டுறு செலவுகளை இனங்காணுவதிலும் கணக்கிடுவதிலும் தவறு ஏற்பட்டுள்ளது என்றும், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளைத் தவிர்ப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	வருடத்திற்குரிய சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(ஆ)	2023 ஆம் ஆண்டில் விசாரணைக் குழுவின் கணக்கில் அட்டுறு செலவுகளாக இனங்காணப்படாத ரூபா 177,200 மீளாய்வாண்டில் தீர்க்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டில் விசாரணைக் குழுவின் கணக்கும் அந்த வருடத்தின் மீகையும் முறையே அதே பெறுமதியால் அதிகமாகவும் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.	அட்டுறு செலவுகளை இனங்காணுவதிலும் கணக்கிடுவதிலும் தவறு ஏற்பட்டுள்ளது என்றும், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளைத் தவிர்ப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	வருடத்திற்குரிய சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் அமைச்சு மூலதன மானியமாக ரூபா 9,487,611 தொகையை வழங்கியிருந்த போதிலும், அலுவலகத்தின் புத்தகங்களின்படி அது ரூபா 7,500,000 ஆக இருந்தது. இதில் ரூபா 5,659,631 வருடத்தினுள் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன், மீதமுள்ள ரூபா 3,827,980 மீண்டெழும் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	மீண்டெழும் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களை தனித்தனியாகப் பெற்றுக்கொண்டு அந்தத் தொகையைச் செலவிடுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும்.
(ஈ)	அலுவலகத்தின் 2024 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மூலதனச் செலவினங்களின் கீழ் மனித வள அபிவிருத்திக்காக ரூபா 1,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அலுவலகத்தினால் பயிற்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 2,045,833 தொகையானது, நிதி ஒதுக்கப்பட்ட மூலதன விடயத்தின் கீழ் செலவிடப்படுவதற்குப் பதிலாக, மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் இருந்த விசேட விசாரணைகள் மற்றும் இடைக்கால அறிக்கை செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.	இனிவரும் காலங்களில் பணியாளர் பயிற்சிச் செலவுகளை மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் கணக்கு வைக்கமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	மூலதனச் செலவினங்களையும் மீண்டெழும் செலவினங்களையும் தனித்தனியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும்.
(உ)	உத்தியோகத்தர்களின் உயர் கல்விச் செலவுகளை மீளளிப்பதற்கான உரிய நடைமுறை அலுவலகத்தில் காணப்படவில்லை என்பதுடன், மன்னார் அலுவலகத்தில் கடமையாற்றும் ஓர் உத்தியோகத்தரின் முதுகலைமாணிப் படிப்புக்காகச் செலவிடப்பட்ட ரூபா 121,500 தொகையானது, நிறுவனத்தின் சட்ட நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையாகக் கருதி, சட்டச் செலவுகளுடன்	இனிவரும் காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றால் செலவுகளைக் கணக்கில் பதிய வேண்டாம் என்று உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், உரிய உத்தியோகத்தருக்கு முதுகலைமாணிப் பட்டப்படிப்பிற்காகச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும்	சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும், அத்துடன் தேவையுடைய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	சேர்க்கப்பட்டமையினால், மீளாய்வாண்டின் மிகை அதே பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	தெரிவிக்கப்பட்டிருந்தது.	

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 முற்பணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரைகள்**
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிக் சுற்றறிக்கையின் 9.1(ஆ) அத்தியாயம் மற்றும் நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், ஒரு உப கட்டுநிதி வழங்கப்பட்டதன் பின்னர், உரிய பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதியை தீர்க்க வேண்டும். இருப்பினும், அலுவலகத்தின் 29 உத்தியோகத்தர்களால் 68 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட உப கட்டுநிதியைத் தீர்ப்பதற்கு 11 நாட்கள் முதல் 96 நாட்கள் வரையான காலப்பகுதி தாமதமாகியிருந்தது.	யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு போன்ற தூரப்பிரதேசங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக இணைப்பாளர்களிற்கு வழங்கப்படும் உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்குரிய உறுதிச்சீட்டுகள் தபாலில் கிடைக்கப்பெறும் போது தாமதம் ஏற்படுவதாகவும், கட்டுநிதியை தீர்ப்பதில் ஏற்படும் தேவையற்ற தாமதங்களைத் தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு அமையச் செயற்பட வேண்டும்.
(ஆ)	மேற்படி (அ) இல் உள்ள சுற்றறிக்கையின் 9.1(இ) மற்றும் நிதிப்பிரமாணம் 371(4) இன் பிரகாரம், நிர்ணயிக்கப்படாத மற்றும் அவசியமற்ற பணிகளுக்கு உப கட்டுநிதி பெறக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அலுவலகத்தின் ஆறு உத்தியோகத்தர்களால் விசாரணை வேலைத்திட்டங்களுக்காக 07 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 574,000 பணத்தைத் செலவு செய்யாமல் திரும்பத் தீர்ப்பதற்கு 06 நாட்கள் முதல் 27 நாட்கள் வரையான காலத்தை எடுத்துக்கொண்டிருந்தனர்.	தாமதம் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதாகவும், காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காகச் செலவிடப்படும் முற்பணங்கள் சில சமயங்களில் மதிப்பிடப்பட்ட அளவுக்குச் செலவு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும், அவை அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்றும், எதிர்காலத்தில் தேவைகளை இனங்கண்டு தேவைக்கு ஏற்றவாறு மதிப்பீடுகளைத் தயாரித்து, அந்தத் தொகைக்கு முற்பணம் பெறுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு அமையச் செயற்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 395(ஏ)	வங்கியில் பணத்தை வைப்பிலிடுவது, காசோலைகளை எழுதுவது அல்லது பணப் புத்தகத்தைப் பேணுவது தொடர்பான எவ்விதத் தொடர்பும் இல்லாத உத்தியோகத்தர் ஒருவரால் வங்கிக் கணக்கு இணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தும், அதற்கு மாறாக பணப் புத்தகம் தொடர்பில் செயற்படும் உத்தியோகத்தராலேயே வங்கிக் கணக்கு இணக்க கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும், உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாகவும், உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ததன் பின்னர் வங்கிக் கணக்கு இணக்க கூற்றினை வேறொரு உத்தியோகத்தரிடம் ஒப்படைப்பதற்குப் குறித்துவைத்துக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான நிறுவனக் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டிக் கேவையின் பின்னிணைப்பு 1 இன் 3 ஆம் பந்தி	கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	அமைச்சிலிருந்து கிடைக்கும் கட்டுநிதியை மட்டுமே நிறுவனம் நம்பியிருப்பதால், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில வழிகாட்டல்களின்படி செயற்படுவது கடினமாகும் என்றும், இருப்பினும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின்படி அதிகபட்சமாகச் செயற்படப் குறித்துவைத்துக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

(இ)	2024 ஏப்ரல் 30 ஆந் திகதிய 02/2024 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 1.2.7 ஆம் பந்தி	அலுவலகத்திற்குச் சொந்தமான இரண்டு மோட்டார் வண்டிகள் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 8,000,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தது.	இந்த மதிப்பீடு அக்ரஹார காப்புறுதி நிதியத்தினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பெறுமதி என்றும், கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பிட்டு, புத்தகங்களில் தேவையான சீரமைப்புகளைச் செய்வதற்குப் குறித்துவைத்துக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

1.8 காசு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
வங்கிக் கணக்கு இணக்க கூற்றில் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக ரூபா 148,900 காட்டப்பட்டிருந்ததுடன், அந்தக் கொடுப்பனவுகளை மீளாய்வாண்டில் மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	வங்கிக் கணக்கு இணக்க கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் குறித்து உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தி, அந்தப் பணத்தை விரைவாக அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துவைத்துக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.	கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றை விரைவாக மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2023 மார்ச் 29 ஆந் திகதிய SEC/2023/E/01 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியிலுள்ள வரி அட்டவணை இல. 01 இன் பிரகாரம், மீளாய்வாண்டில் வேலையின் மூலம் கிடைக்கும் நிலையான இலாபங்களில் 04 உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் வரிக்கடப்பாட்டை விட ரூபா 99,788 குறைவாக வரி கணிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், வரி அறவிடப்படும் உத்தியோகத்தர்களின் வரிக்கான	இவ்வாறான தாமதங்களைத் தவிர்த்துச் சரியாக வரிகளைக் கணக்கு வைக்க உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும், தற்போது சரியாகச் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	வரிச் சுற்றறிக்கைகளுக்கு இணங்கச் சரியான வரி பெறுமதிகளைக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வருமானத்தைக் கணக்கு வைக்கும் போது, மீளாய்வாண்டின் செப்தெம்பர், ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் 04 உத்தியோகத்தர்களுக்கு விசாரணைகளில் கலந்துகொண்டமைக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 628,475 விசாரணைக் குழுப் படி வரி அறவிடக்கூடிய வருமானத்துடன் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	வரி அட்டவணை இல. 05 இன் பிரகாரம், தொழிலிருந்து கிடைக்கும் கூட்டு இலாபங்களின் மீது வரியைக் கழிக்கும் போது, மீளாய்வாண்டில் அலுவலகத்தினால் 05 உத்தியோகத்தர்களிடம் அதிகமாகவும் மூன்று உத்தியோகத்தர்களிடம் குறைவாகவும் வரி கணிப்பிடப்பட்டிருந்தது.	இவ்வாறான தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	வரிச் சுற்றறிக்கைகளுக்கு இணங்கச் சரியான வரிக் பெறுமதிகளைக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,851,889 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,545,375 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 15,397,264 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரச மானியங்களின் பெறுவனவு ரூபா 38,887,541 இனால் அதிகரித்தமைக்கு ஒப்பாக ஆளனி செலவினம் ரூபா 14,715,121 இனால் அதகிரித்தமை, வழங்கல் ரூபா 2,695,669 இனால் அதிகரித்தமை மற்றும் போக்குவரத்துச் செலவினம் ரூபா 2,430,478 இனால் குறைவடைந்தமை என்பன முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) கடந்த வருடத்தில் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 9,057,144 செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 5,659,631 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உண்மைச் செலவில் ரூபா 3,397,513 அதாவது, செலவில் 38 சதவீதக் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடந்த வருடத்தில் தனியாள் ஊதியத்திற்காக ரூபா 31,012,002 செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 45,727,123 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில செலவினத்தில் ரூபா 14,715,121 தொகையான அதாவது, 47 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(இ) விநியோகச் செலவுகளுக்காகக் கடந்த வருடத்தில் ரூபா 3,699,098 செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 6,394,765 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் செலவில் ரூபா 2,695,667 தொகையான அதாவது, 73 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஈ) பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காகக் கடந்த வருடத்தில் ரூபா 1,476,286 செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 6,270,911 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் செலவில் ரூபா 4,794,625 தொகையான, அதாவது, 325 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்று அலுவலகத்தினால் விசாரணை நிறைவுசெய்யப்பட்ட 2,109 கோப்புகள் புனர்வாழ்வளிப்பு கொடுப்பனவு வழங்குவதற்காக இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலுவலகத்தினால் திசெம்பர் 31 ஆந் திகதியன்று 1,930 கோப்புகளுக்குப் புனர்வாழ்வளிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், 127 கோப்புகள் மீண்டும் ஒருமுறை கொடுப்பனவுக்காக வருடத்தினுள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.	காணாமல்போன ஒரு நபருடன் தொடர்புடைய விண்ணப்பதாரர்கள் சிலர், அதாவது தாய், மனைவி, சகோதரங்கள் போன்ற பலரும் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில், ஒரே நபரின் பெயரில் பல கோப்புகள் திறக்கப்படும் சந்தர்ப்பங்கள் இருப்பதனால், இவ்வாறான கோப்புகள் இருமுறை சமர்ப்பிக்கப்பட வாய்ப்புள்ளது என்றும், எவ்வாறாயினும் இனிவரும் காலங்களில் இது குறித்து விழிப்புடன் இருக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	கொடுப்பனவுக்காக அனுப்புவதற்கு முன்னர், சரியான தன்மையைச் சோதித்துப் பார்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு, அது தொடர்பான முகாமைத்துவ அறிக்கை பெறப்பட்டதன் பின்னர், பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு இறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக 318 கோப்புகளும் காணாமல்போனோர் சான்றிதழ்கள் வழங்குவதற்காக 1,964 கோப்புகளும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. வருடத்தினுள் 56 இறப்புச் சான்றிதழ்களும் 279 காணாமல்போனோர் சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இது முறையே 18 சதவீதம் மற்றும் 14 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	இது குறித்து 2023 மார்ச் 26 ஆந் திகதியிட்ட கடிதம் உட்பட 6 சந்தர்ப்பங்களில் முன்னேற்றம் குறித்து விசாரித்து பதிவாளர் நாயகத்திற்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததாகவும், 2025 ஜூன் 02 ஆந் திகதி அதற்கான பதில் கிடைத்ததாகவும், இது தொடர்பாகப் பதிவாளர் நாயகத் திணைக்களத்துடன் தொடர்ச்சியாகச் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	பின்தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	அலுவலகத்தினால் ஆரம்ப விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், மேலதிக விசாரணைக்காகச் தேடல் மற்றும் விசாரணைப் பிரிவிற்கு வருடத்தினுள் 526 கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்த	அந்த 526 கோப்புகளில் 17 கோப்புகளின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு, நபரின் விதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வும், அதில் 15 காணாமல்போன நபர்கள்	விசாரணை நடவடிக்கைகளை விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதிலும், உரிய பிரிவினால் வருடத்தினுள் 17 கோப்புகளின் விசாரணை நடவடிக்கைகளே நிறைவு செய்யப்பட்டிருந்தன.	உயிருடன் இருப்பதாகவும், இருவர் இறந்துள்ளதாகவும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாகவும், ஏனைய கோப்புகளுக்கான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை அமைப்பது தொடர்பான சட்டத்தின் 11 ஆம் பிரிவில் அலுவலகத்தின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் 10(1)(அ) பிரிவின் பிரகாரம், காணாமல் போனோரைத் தேடுதல், கண்டறிதல் மற்றும் அதற்கான பொருத்தமான பொறிமுறைகளை இனங்காணுதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் இரண்டாம் கட்டத்தின் கீழ் விசாரணையில் உள்ள 8,963 கோப்புகளில், மீளாய்வாண்டினுள் 1,104 கோப்புகள் விசாரணைக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.	1,104 கோப்புகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளத் தயாராக இருந்த போதிலும், விசாரணைகள் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் இரண்டாம் கட்டத்துடன் தொடர்புடைய கோப்புகளைத் தயாரிப்பதற்குப் பதிலாக, முதலாம் கட்டத்துடன் தொடர்புடைய புதிய முறைப்பாடுகளையும் இதற்கு முன்னர் விசாரணைக்காக அழைக்கப்பட்டும் கலந்துகொள்ளாத விண்ணப்பதாரர்களின் கோப்புகளையும் பரிசோதித்து, அவர்களை மீண்டும் அழைத்து 1,227 விசாரணைகள் 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் அலுவலகத்திற்குச் சொந்தமான இரண்டு மோட்டார் வாகனங்கள் ரூபா 8,000,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தன. வருடத்தினுள் இந்த இரண்டு மோட்டார் வாகனங்களின் திருத்தப் பணிகளுக்காக ரூபா 1,078,106 செலவிடப்பட்டிருந்த போதிலும்,	2024 ஆம் ஆண்டில் சாரதிகளை ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனை நிறைவு செய்ய முடியவில்லை என்றும், சாரதிகள் பற்றாக்குறை காரணமாக மோட்டார் வாகனங்களை	வெற்றிடங்களை விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
	வருடத்தினுள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை.	ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் அலுவலகத்தில் அலுமினியப் பகிர்வுச் சுவர் பொருத்துவதற்காக ரூபா 1,379,575 செலவிடப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.2(அ) பந்தியின் பிரகாரம், சமர்ப்பித்த வழங்கலாளரின் விலையைச் சந்தை விலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அத்துடன், வழிகாட்டிக் கேவையின் 8.9.1(ஆ) பந்தியின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட அந்த வழங்கலாளருடன் ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இந்தச் சேவை நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 பந்தியின் பிரகாரம், அதில் உள்ளடக்கப்பட்டிருந்த விபரக்குறிப்புகளுக்கு அமைய அந்த வேலை நிறைவேற்றப்பட்டதா என்ற உறுதிப்படுத்தாது பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, கொள்வனவுக் கையேட்டின் பின்னிணைப்பு 40 மற்றும் அதன் 2.14.1 பந்தியின் பிரகாரம், இந்தக் ஒப்பந்தமும் ரூபா 308,423 செலவில் ஆவணக் காப்பகத்தில் தரைவிரிப்பு இடுவதற்கான ஒப்பந்தம் நிறுவனத் தலைவரின் அங்கீகாரம் இன்றி நிதி மற்றும் பெறுகைகள் பிரிவின் தலைவரின் கையொப்பத்துடன் உரிய நிறுவனங்களுக்கு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.	தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் மதிப்பீடு நிலவும் விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதனால், அந்த மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைந்த தொகைக்கே அந்த வேலை ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும், மதிப்பீட்டின்படி இந்த வேலை நிறைவேற்றப்பட்டதாக மனித வள முகாமைத்துவ உத்தியோகத்தரால் சான்றளிக்கப்பட்டதாகவும், உரிய ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையில் 57 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரையிலும் இந்த வேலை தொடர்பில் எவ்விதக் குறைபாடும் அறிக்கையிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ)	அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(இ) பந்தியின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அல்லது அந்தக் குழுவின் அங்கத்தவர்களுள் தெரிவு செய்யப்படும் தலைவரின் பெயரிடப்பட்ட ஒருவர் விலைமனுச் சமர்ப்பிப்பதற்கு முன்னரான கூட்டத்தில் கலந்துகொள்ள	விலைமனுக்களைக் கோருவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்களில் விலைமனுச் சமர்ப்பிப்பதற்கு முன்னரான கூட்டம் (Pre-bid meeting) நடத்தப்படும் என்று எவ்விதக் குறிப்பும் இடம்பெறவில்லை என்றும், இவ்வாறான Pre-bid meeting சிக்கலான பெறுகை வேலைகளில்	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	வேண்டும். இருப்பினும், ரூபா 1,549,857 செலவில் அலுவலகத்தின் 05 பிரிவுகளுக்காக 05 குளிரூட்டிகளை கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகையில் அவ்வாறு செயற்படவில்லை. மேலும், 2.12(அ) பந்தியின் பிரகாரம், பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் அனைத்து அங்கத்தவர்களும் பெறுகைகள் கையேட்டின் படிவத்தின்படி ஓர் உறுதிமொழி கையொப்பமிட வேண்டும். இருப்பினும், குழுவின் அங்கத்தவர்கள் அந்த உறுதிமொழியில் கையொப்பமிடவில்லை. அத்துடன், 8.9.1(ஆ) பந்தியின் பிரகாரம், ஒப்பந்தம் எதனையும் மேற்கொள்ளவில்லை.	நடத்தப்பட்டாலும், இந்த வேலையில் அத்தகைய சிக்கலான விளக்கம் எதுவும் இல்லாததால் விலைமனுச் சமர்ப்பிப்பதற்கு முன்னரான கூட்டம் (Pre-bid meeting) நடத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	
(இ)	மீளாய்வாண்டில் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் திறன் விருத்திக்காக இரண்டு பயிற்சித் திட்டங்கள் ரூபா 2,049,242 செலவில் நடாத்தப்பட்ட போதிலும், தேவையான இடங்களைத் தெரிவு செய்வதிலும் ஏனைய தேவைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பெறுகைகள் வழிகாட்டிக் கேவையின் பின் எந்தவொரு தேவையும் பூர்த்தி செய்யப்படவில்லை.	ஒரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாத்திரம் விலைமனுக்கள் கோரப்பட்டு, அது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான CEWAS நிறுவனத்திலும், மற்றைய நிகழ்ச்சித்திட்டம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் நடத்தப்பட்டதாகவும், மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு நிறுவனங்களும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்று அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 255 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணி 37 ஆக மட்டுமே இருந்தது. அலுவலகத்தின் செயற்பாடுகளைத் திறம்பட மேற்கொள்ள முடிவெடுப்பதற்குத் தேவைப்படும் 8 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களின் மற்றும் 25 மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களின் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையினால்,	உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாததால் அதனை நிறைவு செய்ய முடியவில்லை என்றும், 2025 ஆம் ஆண்டில் புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி கிடைத்தவுடன் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை	வெற்றிடங்களை விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அலுவலகத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அது தடையாக இருந்தது.	மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கையின் வரைபு என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2025 மே 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதனுடன் வருடாந்த அறிக்கையின் வரைபு எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.	இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு 2025 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அதில் இருந்த ஆரம்பக் குறைபாடுகள் காரணமாக 2025 மே 27 ஆந் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது என்றும், கணக்குப் பிரிவில் கடமைகளைப் பிரித்து ஒழுங்குமுறையாக ஒப்படைக்கப் போதுமான பணியாளர்கள் இன்மையால் இந்தக் குறைபாடுகளும் தாமதங்களும் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 ஆண்டறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவ கருத்துரை**	**பரிந்துரை**
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் அபிப்பிராயம் என்பன அடங்கிய அலுவலகத்தின் ஆண்டறிக்கை, நிதியாண்டு முடிவடைந்து 5 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2023 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2025 மார்ச் 07 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகவும், 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை விரைவாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் ரூபா 8,800,000 செலவில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்ட 10 நிகழ்ச்சித் திட்டங்கள் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன், 4 நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகையை விட 122 சதவீதம் முதல் 459 சதவீதம் வரையான வீச்சில் செலவில் அதிகரிப்பும், 08 நிகழ்ச்சித் திட்டங்களில் 82 சதவீதத்திற்கும் அதிகமான பணச் சேமிப்பும் காணப்பட்டது.	தரவுத்தள முகாமைத்துவக் கட்டமைப்பு (Data Base Management System) ஒன்று திட்டமிடப்பட்ட போதிலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) அந்த கட்டமைப்பை இலவசமாக வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தமையும், வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் நடத்துவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்ட போதிலும், அந்த உத்தியோகத்தர்கள் ஆரம்பத்தில் நடத்திய பரீட்சையில் தோல்வியடைந்தமையால் அதற்கு அரசாங்கத்தின் பணத்தைச் செலவிட முடியாதிருந்தமையும், 2023 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட பணிகளை 2024 நான்காம் காலாண்டில் நடைமுறைப்படுத்த முற்பட்ட போது பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தமையும், வெளிநாட்டுப் பிரதிநிதி நிறுவனங்களால் சில பணிகளுக்கு வளப் பங்களிப்பு வழங்கப்பட்டமையும் இதற்குக் காரணங்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் மனநல மற்றும் உளவியல் சமூக ஆதரவிற்காக நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 3.4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நிதிக் முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இதன் கீழ் ரூபா 1.4 மில்லியன் செலவில் 6 மாவட்டங்களில் 6 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஒரேயொரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் இதன் முன்னேற்றம் 16 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	பாதிக்கப்பட்டோர் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்ப ஆதரவுப் பிரிவில் ஒரேயொரு உத்தியோகத்தர் மாத்திரமே இருந்தமையினாலும், மனநல மற்றும் உளவியல் சமூக ஆதரவு குறித்து அறிவுள்ள தமிழ்பேசும் உத்தியோகத்தர்கள் இன்மையினாலும், இந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

(இ)	பாதுகாப்புப் பிரிவினால் ஆணடினுள் ரூபா 1.2 மில்லியன் செலவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான ஆலோசனைக் கூட்டங்களை ஆதரிப்பதற்காக 12 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்த மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வருடத்தினுள் 01 நிகழ்ச்சித் திட்டம் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் இது 08 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மனநல மற்றும் உளவியல் சமூக ஆதரவுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்ட போதிலும், தேவையான உத்தியோகத்தர்கள் இல்லாததால், அந்த 12 நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்று மாத்திரமே நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயல்நடவடிக்கைகத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்களின் திறன் விருத்திக்காக நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த மீளாய்வாண்டில் ரூபா 700,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,000 செலவில் வருடத்தினுள் 2 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 40 சதவீதம் எனும் மட்டத்தில் காணப்பட்டதுடன், மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் 99 சதவீதம் மீதமாகியிருந்தது.	2024 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவின் மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமைகளில் ஈடுபட்டிருந்தமையால், அலுவலகத்தினுள்ளேயே அந்தக் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதாகவும், அதனால் மண்டப வசதி, போக்குவரத்துச் செலவுகள் அல்லது மேலதிக உணவுக்கான செலவுகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்களின் திறனை அதிகரிப்பதற்காக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	சட்டப் பிரிவினால் மீளாய்வாண்டில் காணாமல் போனோர் தொடர்பான 100 குடும்ப உறுப்பினர்களின் சமூக நலன்புரிப் பிரச்சினைகளுக்கு ஆதரவளிப்பதற்காக நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த ரூபா 500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், வருடத்தினுள் ரூபா 136,000 செலவில் ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலாளர் அலுவலக உத்தியோகத்தர்களுக்காக ஒரு பயிற்சித் திட்டம் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 45 சதவீதம் எனக் காட்டப்பட்ட போதிலும், பணம் ஒதுக்கப்பட்ட நோக்கம் அதாவது, 100 குடும்பங்களின் சமூக நலன்புரிப் பிரச்சினைகளுக்கு ஆதரவளித்தல் நிறைவேற்றப்படவில்லை.	2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை சட்டப் பிரிவில் மூன்று உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமைகளில் ஈடுபட்டிருந்தமையால், நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்கவும் நடாத்தவும் போதிய திறன் இருக்கவில்லை என்றும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலக அலுவலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அறுபது அரச உத்தியோகத்தர்களைக் கலந்துகொள்ளச் செய்து அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்களின் திறனை அதிகரிப்பதற்காக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	ஆய்வுக் கையேடுகள் மற்றும் விசாரணை மூலோபாயங்களைத் தயாரிப்பதற்காக வருடத்தினுள் ரூபா 2,321,983 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக மீளாய்வாண்டில் எந்தப் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆய்வு மற்றும் விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் கையேடுகள் போன்றவற்றை அச்சிடுவதற்காக ரூபா 1,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஆய்வுக் கையேடுகள் மற்றும் விசாரணை மூலோபாயங்களைத் தயாரிப்பதற்காக உரிய ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அது நிறைவு செய்யப்படாததால் நிதிச் சேமிப்புக் காணப்படுவதாகவும், ஆய்வுக் கையேடுகள் மற்றும் விசாரணை மூலோபாயங்களைத் தயாரிப்பதற்காகச் செய்யப்பட்ட செலவானது விசேட விசாரணை அறிக்கைகள் என்ற தலைப்பின் கீழ் செலவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வகையில் செயல்நடவடிக்கைகத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.